செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under Ministry of Education, Government of India)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113

# இலக்கியப்புலம்

**நடத்தும்**

## சிலப்பதிகாரம்: மூலம், காலம், சமயச்சார்பு, உரைகள்

## Cilappatikāram: Text, Date, Religious sect, Commentaries

### பயிலரங்கம் – 12

(01.12.2021 – 07.12.2021)

### அறிவிப்பும் அழைப்பும்

இலக்கியங்கள் அவை இயற்றப்பட்ட காலத்தின் சமூக, பொருளாதார பண்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டு இலங்குகின்றன. அவ்வகையில் தமிழர் போற்றும் ஐம்பெருங்காப்பியங்களுள் தலைசிறந்து இலங்குவது சிலப்பதிகாரம்; பழந்தமிழ் நாட்டின் சீர்மைக்கும் செம்மைக்கும் சான்றாக நிற்பது சிலப்பதிகாரம்; சோழநாட்டின் செழுமையும், பாண்டிய நாட்டின் சிறப்பும், சேர நாட்டின் வீரமும் அக்காப்பியத்திலே சிறந்து விளங்குவதனைக் காணலாம்.

சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த காப்பியம் என்பது பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. இதற்கான அடிப்படைச் சான்றாக இளங்கோ அடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பி என்பதும் இச்செங்குட்டுவனே சங்க இலக்கியத்தில் ஒன்றான பதிற்றுப்பத்தில் பாடப்பட்டவன் என்பதும் இவன் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பதும் உறுதிப்படுத்தப்பட்டதாகக் கருதுவர். மேலும் வரந்தரு காதையில் இடம்பெறும் கண்ணகி வழிபாட்டில் இலங்கை வேந்தன் கயவாகு கலந்து கொண்டான் என்பதும் இவன் காலமும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பதும் இலங்கை வரலாற்றால் அறியப்படுகிறது. சிலப்பதிகாரம் கி.பி ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும்

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இயற்றப்பட்டிருக்கலாம் என்று கருதுவாரும் உண்டு. இயல், இசை, நாடகம் எனும் மூன்றனையும் ஒருங்கே பெற்ற, சிறப்பு வாய்ந்த சிலப்பதிகாரத்தின் காலத்தினை ஆய்ந்து அறிவது தேவையாகின்றது.

உரை என்பதற்கு உரைத்தல், சொல்லுதல் என்பது அடிப்படையான பொருள்; இதற்கடுத்து உரைநடை; இதற்கடுத்ததாக விளக்கம், அதாவது இலக்கியம் அல்லது இலக்கணத்தை விளக்குவது. இதனை உரை என்று கூறுவர்.

சிலப்பதிகாரத்தினை ‘உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்’ என்று அதன் பதிகம் கூறுகிறது. சிலப்பதிகாரத்திற்கு முதலில் தோன்றியது அரும்பதவுரை ஆகும். செய்யுளில் காணப்படும் அரிய சொற்களுக்கு மட்டும் விளக்கம் தரும் உரையை அரும்பதவுரை என்பர். 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அடியார்க்கு நல்லார் உரை பலராலும் போற்றப்படும் ஒன்று. அடியார்க்கு நல்லாரின் உரையின்றேல் இசை, நடனம், பற்றிக் கூறும் அரங்கேற்று காதைக்கு உரை கண்டிருக்க முடியாது. இன்று சிலப்பதிகாரத்திற்குப் புத்துரைகள், தெளிவுரைகள், விளக்கவுரைகள் கூறுவதற்கு அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையுமே துணை நிற்கின்றன.

சிலம்பில் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் இடம்பெறுகின்றன. இச்சமயங்களை விழாக்களின் மூலமும் சமயச் சான்றோரின் நற்கருத்துக்கள் வாயிலாகவும் வெளிப்படுத்துகின்றார் இளங்கோ அடிகள். சிலப்பதிகார ஆசிரியரைச் சமணர் என்றுதான் பலர் எண்ணுகின்றனர். அதே போன்று சிலப்பதிகார ஆசிரியர் சமயச் சார்புடையவர் என்றும் சமயச் சார்பு அற்றவர் என்றும் பலவேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

இலக்கியவியல் நோக்கிலும் காப்பியவியல் நோக்கிலும் தனக்கெனத் தனித்த மரபுகளைக் கொண்டுள்ள சிலப்பதிகாரத்தின் இத்தகைய பல்வேறு கூறுகளை ஆய்வது இன்றியமையாத் தேவையாகிறது.

இவற்றினைக் கருத்தில் கொண்டு **’சிலப்பதிகாரம்: மூலம், காலம், சமயச்சார்பு, உரைகள்’** என்னும் பொருண்மையிலான பயிலரங்கை ஆய்வு மாணவர்களுக்குப்

பயிற்றுவிக்கும் நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இலக்கியப் புலம் நடத்தவுள்ளது.

ஆய்வு மாணவர்கள் மட்டுமே இப்பயிலரங்கில் பங்கேற்க முடியும். ஆய்வு மாணவர்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் துறைசார்ந்த அறிஞர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர். ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு வரும் மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்குபெற்றுப் பயன்பெறுமாறு அழைக்கின்றோம்.

இப்பயிலரங்கமானது 01.12.2021 முதல் 07.12.2021 ஆம் நாள் முடிய ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 20.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 01.12.2021 முதல் 07.12.2021 முடிய (7 நாட்கள்).
3. பயிலரங்கு நேரம்: காலை: 10.00 – 01.00 & 02.00 – 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளருக்கு நண்பகல் உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து workshoplit@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக் கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.

9. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் 25.11.2021. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 26.11.2021 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

## சிலப்பதிகாரம்: மூலம், காலம், சமயச்சார்பு, உரைகள்

**பயிலரங்கம்**

(01.12.2021 – 07.12.2021)

**விண்ணப்பப் படிவம்**

நிழற்படம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பிறந்த நாள் / வயது | | |
| 3. | பாலினம் | | |
| 4. | வகுப்பு (✓ செய்க) | | பொது ☐ இ.பி.வ. ☐ பட்டியல் இனத்தவர் ☐ |
| 5. | கல்வித் தகுதிகள் | | |
| 6. | முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள் / ஆண்டு | | |
| 7. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | |

| | | |
|---|---|---|
| 8. | பல்கலைக்கழகம் / கல்லூரி/ நிறுவன முகவரி<br>(தொலைபேசி / மின்னஞ்சல் முகவரியுடன்) | |
| 9. | இல்ல முகவரி<br>(தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன் | |
| 10. | புலன எண் | |
| 11. | செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா?<br>ஆம்/இல்லை<br>ஆம் எனில் விவரம். | |

நாள்: கையொப்பம்

இடம்:

நெறியாளர்/துறைத்தலைவர்/முதல்வர்/பதிவாளர்
உரிய முத்திரையுடன் கையொப்பம்